மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அதுபற்றி விவரக் குறிப்புகள் இல்லை. அதற்கென்று தனி குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அவர்கள் அந்தந்தப் பள்ளிகளில் இருக்கின்ற புத்தகங்களை ஆராய்ந்து, மாணவர்களுடைய அறிவை வளர்ப்பதற்கும், பொது அறிவு, நுண்ணறிவு இவற்றையெல்லாம் வளர்ப்பதற்கும் மாணவர்களுடைய தேவையைக் கண்டறிந்தும் புத்தகங்களை வாங்க ஏற்பாடு செய்கிறார்கள். சில பள்ளி நூலகங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்றது போன்ற புத்தகங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

தொடக்கப் பள்ளிகளில் புத்தகங்கள் வழங்கல்

*168 **வினா—திரு. கா. வேழவேந்தன் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநர் மூலமாகத் தொடக்கப் பள்ளிகளுக்கு இன்றியமையாத நூல்களை வாங்கி வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படுகின்றதா ?

(இ) ஆம் எனில், அப்படி வாங்கப்படும் நூல்கள் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) நூல்களைப் படிப்பதில் தொடக்கப் பள்ளி மாணவர்களுக்கு ஆர்வமூட்டுபவையும், அவர்கள் அறிவைப் பெருக்குபவையும் ஆன அம்மாணவர் தரத்துக்கேற்ற நூல்களும், தொடக்கப் பள்ளிகளின் பயிற்சித்தரம் உயரத் தேவையான அகராதி, தேசப்படப் புத்தகம் முதலிய கருவி நூல்களும் இத்திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு வாங்கப்படுகின்றன.

திரு. கா. வேழவேந்தன் : தலைவரவர்களே, தொடக்கப் பள்ளி மாணவர்களுடைய தரத்தை உயர்த்துவதற்கென இந்த நூல்கள் ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு வாங்கப்படுகின்றன என்ற விவரத்தைத் தர முடியுமா ? அப்படி நூல்களைத் தேர்ந்தெடுக்கிற நேரத்தில் தமிழ் வளர்ச்சிக் கழகம் ஆண்டுக்காண்டு பரிசு தருகிறதே. அந்தப் பரிசைப் பெறுகிற நூல்கள் ஒவ்வொன்றையும் 2,000 பிரதிகள் வாங்கி வைக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

1975 நவம்பர் 4]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, 3-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிட்டததட்ட ரூ. 4,55,000 மதிப்புடைய நூல்கள் 22,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 5,000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கபபடடுளளன. 1965-66-ல் ரூ. 2,05,000 மதிப்புள்ள புத்தகங்கள் 11,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 4,000 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 4,59,000 விலை மதிப்புடைய புத்தகங்கள் 10,000 துவக்கப் பள்ளிகளுக்கும் 2.500 உயர் துவக்கப் பள்ளிகளுக்கும் வாங்கி வழங்கப்பட்டுள்ளன. 1974-75-ல் ரூ. 1,00,000 மதிப்புள்ள புத்தகங்கள் பல்வேறு பள்ளிகளுக்கு வாங்கி வழங்கப் பட்டுள்ளன. ஆகவே, ஒவ்வொரு பள்ளிக்கும் கிட்டத்தட்ட ரூ. 100 லிருந்து, ரூ. 150 வரை விலை மதிப்புள்ள புத்தகங்கள் மட்டும்தான் ஆங்காங்கு வழங்கப்படுகின்ற சூழ்நிலை இருந்து வருகிறது.

மேம்பாலங்கள்

* 169 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரையிலிருந்து விமான நிலையத்துக்கு செல்லும் வழியில் தெற்கு வாசலுக்குப் பக்கத்தில் இருப்புப் பாதையின் குறுக்கே மேம்பாலம் ஒன்று கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, மதுரையிலிருந்து விமான நிலையத்திற்குச் செல்கின்றபொழுது, மிக அவசரமாக, முக்கியமாக வியாபார பெரியவர்கள் எல்லாம் செல்கிற நேரத்தில் திடீரென்று மதுரை தெற்கு வாசலிலே இருக்கிற இருப்புப் பாதை கேட் சாத்தப்படுகிறது. கேட் திறக்கப்படுவதற்குள் விமானம் போய்விடுகிறது. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதுதான் ஆம் என்று சொல்லி விட்டாரே, மறுபடியும். . .